சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 42/2021

பெயர் திருமதி. அஞ்சலை நாள். 12.09.2025
க/பெ. பொன்னுசாமி

**வாதி சாட்சி 3 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் செய்யூர் மேற்குத் தெருவில் வசித்து வருகிறேன். நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் வயலூர் கிராமம் ஆகும். எனக்கு 35 வருடத்திற்கு முன்பு திருமணம் ஆனது. என் கணவர் பெயர் பொன்னுசாமி. எனக்கு திருமணம் ஆன பின்புதான் செய்யூர் கிராமத்திற்கு வந்தேன் என்றால் சரிதான். என் கணவர் வாதிகளின் உறவினர் என்றால் சரியல்ல. வாதிகள் சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளனர். முருகன் தனக்கு சொத்து வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்குச் சொத்தின் புல எண்.715ல் 6. அதன் அளவு 28 சென்ட் ஆகும். வழக்குச் சொத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள புதிய புல எண் தெரியாது. வழக்குச் சொத்து என்ன வகையான நிலம் என்று எனக்கு தெரியாது என்றால் வானம் பார்த்த பூமி ஆகும். வழக்குச் சொத்து பிரதிவாதிகளின் தகப்பனார் எல்லப்பனுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் எனக்கு தெரியாது. வழக்குச் சொத்துக்களுக்கு வாதிகளின் பெயரில் ஆவணங்களை நான் பார்த்ததில்லை. வழக்குச் சொத்து எல்லப்பனுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், அரசாங்கம் அவருக்கு சொத்துக்களை ஒப்புக் கொடுத்துள்ளது என்றாலும் சரியல்ல. அதனால் தான் வழக்குச் சொத்தை வாதிகள் இன்றைய தேதி வரை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

2) வழக்குச் சொத்தின் பட்டா பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. வழக்குச் சொத்தை வாதிகள் எக்காலத்திலும் அனுபவம் செய்தது

கிடையாது என்றாலும், பிரதிவாதிகள் தான் வழக்குச் சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல. வழக்கின் 8ம் வாதி துரைசாமி என்பவர் எனக்கு உறவினர் என்றால் சரியல்ல. 8ம் வாதியின் மனைவியின் சகோதரரைதான் நான் திருமணம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாதிகளின் உறவினர் என்னும் முறையில் வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 7 முதல் 9 வாதிகள் புல எண்.715/6பி –யில் 2 ½ சென்ட் நிலத்தை 2ம் பிரதிவாதி குமார் என்பவருக்கு கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்குத் தெரியாது. பாக்கியம்மாள் எப்பொழுது இறந்தார் என்று எனக்குத் தெரியாது. அவர் பெயரில் எப்பொழுது பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்று எனக்குத் தெரியாது.

3) முதல் விசாரணை வாக்கமூல சங்கதிகள் வாதிகள் கூறியதன் பேரில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனவே என்னுடைய சாட்சியம் ஏற்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.